உ

விராட் விஸ்வகர்மணே நம:

ஒற்றைமாநகரம்

விஸ்வகுல வித்வரத்நம்

செந்தமிட்சந்தம் பாலகவி

G. T. அரங்கசாமிதாஸ்

அவர்களால் இயற்றிய

சிவராம பஜனமிர்தம் என்னும்

பக்திரசக்கீர்த்தனைகள்.

ஸ்ரீலஸ்ரீ கன்னிச்சமீன் சரபம் உடுமலை

அ. முத்துச்சாமிக்கவிராயர் அவர்களால்

பரிசோதிக்கலுற்றது.

OF THE REGISTRAR OF BOOKS
25 MAY 1927
MADRAS

வீரபாண்டிமாநகரம்

மகா-ா-ா-ஸ்ரீ ஸ்ரீமான் பக்த பூஷணம்

V R. துரைசாமி நாயுடு அவர்களால்

கோயமுத்தூர்

சத்திவடிவேல் அச்சுயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1926

[அணா 0-10-0]

அ2:417
N26.
6802

உ

விராட் விஸ்வகர்மணே நம:

ஒற்றைமாநகரம்

விஸ்வகுல வித்வரத்நம்

செந்தமிட்சந்தம் பாலகவி

G. T. அரங்கசாமிதாஸ்

அவர்களால் இயற்றிய

சிவராம பஜனமிர்தம் என்னும்

பக்திரசக்கீர்த்தனைகள்.

OFFICE 25

ஸ்ரீலஸ்ரீ கன்னிச்சமீன் சரபம் உடுமலை

அ. முத்துச்சாமிக்கவிராயர் அவர்களால்

பரிசோதிக்கலுற்றது.

வீரபாண்டிமாநகரம்

மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீமான் பக்த பூஷணம்

V. R. துரைசாமி நாயுடு அவர்களால்

கோயமுத்தூர்

சத்திவடிவேல் அச்சுயந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

1926

இதன் விலை] [அணா 0-10-0

ஒ.2.417
N26
68035

விஸ்வகுலவித்வரத்நம் செந்தமிட்சந்தம்,

பாலகவி G. T. அரங்கசாமி தாஸ்

ஒற்றைமாககரம்

உடுமலைப்பேட்டை கன்னிச்சமீன் சரபம்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ உ. முத்துச்சாமி கவிராயரவர்கள் இயற்றிய

சாத்துக்கவி.

ஆசிரியவிருத்தம்,

உலகநிலை முழுதுமதி னுளமா னுடைப்பகுதி
யோதியுணர் வாய்மைபற்றி
ஒருவழிப்படுமனது பெருகுபத்தியைமருவி
உய்யவே யிருசமயமும்
கலகமறநாளுங்கலந்துபாடிப்பரம
கதிபேசவேண்டுமென்று
கனிவாகவரிதான சிவராமபஜனையைக்
கழறிபதி புகழ்மேவினான்
பலவளமும் விவசாய நலவழியிலெனுமாதி
பரமேஸ்வரன்பானையப்
பாடசாலையைவைத்த பாககுண குருசாமி
பாலன் ஜனனுகூலன்
தலைமை விஸ்வப்பிரமகுல விகர்னனெற்றைத்
தடங்காவின் மண்டபம்வளர்
சங்கநேமித்தஜெய ரங்கசாமிப்ரபல
சம்பனன் பெரிதுமாதோ

கட்டளைக்கலிப்பா.

கற்றைக்கார்முகிற் கட்டளகத்தினார்
காமமின்றிக்கருத்தொருமித்துமேற்
பற்றைக்காரணப்பால் சிவராமப்பேர்

பஜனைபாற்பலபாடிப் பராவினுன்
மற்றைக்காசினியற்புதத்தைச்சுரர்
மதிக்கநீடிவளர் தென்னஞ்சோலைசூழ்
ஒற்றைக்கால்மண்டபக் குருசாமிசேய்
ஓமுலாரங்கசாமிவிவேகியே.

இங்ஙனம்,
உ. முத்துச்சாமிக்கவிராஜசரபம்.

ஓம் தத் ஸத்.

சிவராம பஜனமிர்தம் என்னும்

பக்திரசக்கீர்த்தனைகள்.

கணபதி காப்பு.

சீரோங்குராமபிரான்றிருவடியைமனமகிழ்ந்துசிந்தித்தேத்திப்
பாரோங்குசிவராமநாமசுந்தரக்கவிதை பண்பாய்ப்பாட
பேரோங்கவரமளிக்குமீஸ்வரியாளீன்றெடுத்தபெருமான்மிக்க
ஏரோங்குகணபதியினிணையடியையநுதினமுமிறைஞ்சிவாழ்வாம்.

தொந்திக்கணபதி சந்தசாஹித்யம்.

ஓரடிக்கீர்த்தனை.

ஸ்ரீராகம், மத்மாவதி, கல்யாணி, நாட்டை, தோடி, பைரவி
முதலிய ராகங்களிற் பாடலாம். தாளம் ரூபகம்.

பல்லவி.

மதிநதியணி பரனருள்நீதா சிவராமபஜனை
வரைய முன்வருங்குண கணநாதா

அநுபல்லவி

அதிபதி மூவர் கைலையை நாடி
அணி ரதகஜ தாரக மோடோடி
கதி யுடன் செல்முன் ஔவையைநாடிக்
கனத்ததும்பிக்கையால் எடுத்துவிடுத்தநிபுண
நினைத்துநம்பிக்கையாய் மனத்து ஜித்தன் சுகுண
நிறைவுறவரமருள்புரிவாய் விரைவொடுமுனமேவருவாய்
நீலச்சிந்தூரா பாலச்சுந்தரா (மதி)

சரணம்.

பஞ்சவேதத்தின்மூலா — தமிழ்
பாராயணர்க்கனுகூலா — நின்
தஞ்சமென்றேன் குணசீலா — எழில்
தாரகமந்ரான்மருகாசுசீலா — மலைச்
சாரக்குறமகள்உருவது
சாரக்கனியெனவுறைசெய்து
சாரக்குயிலிசைநாரதர்
சாரக்கனிவுடன்மனதுவி
சாரக்கடலினிலுருகிட முருகனப்புனமே
சாரப்பலவிதவுருவொடு
சாரப்பலனிலதறிந்துணே.

வேகத்துடனழைத்திடவுயர் நாகத்துருவென வழகிமுனுகச்செல
வெருவிடவவள் ஸ்நேகத்திருமணமதுபெற நீசத்தியபேபுரியென
நேருற்றவளிடமுறைசெய மாதுத்தமிசரியெனதர
வேயற்புதவதுவைபுரிய

வந்தவா — பெரிதுமு
வந்தவா — அதிஜெய
வந்தவா — கஜமுக
வந்தவா — இதுதகி

சாரத்துடனுசுமதுர தீரப்பிரபல கவிவிஸ்தாரச்சித்திரமதுடன
பாரத்தமிழது சொலவருள் நாயகா—சமயம்
தக்ககளிப்புடனற்கடலைப்பொரியப்பமவற்
கதலிக்கனியொப்பிடும் விக்னவிநாயகா—எந்தன்
துக்கமகற்றி எனக்குன கற்புதநற்பதமிக்க
வளித்திடுசற்குணமுற்றிடு

தாயகா— அன்பர்
நேயகா—தந்ரவு
பாயகா—ஓம்மந்
ராயகா—வல்லபை
நாயகா—சப்த

சாகரமேவியமேதினி தனிலென்னுளுங்கன்ம
சாகரமேவிய பிறவி தனிற்பிறந்துபன்னுளும்
சாகரமேவிய நீர்க்கோல் வாழ்வைவெறுத்தெனுளும்
சாகரமேவிய பாரதமேவரைந்தவாநாளும்

சாற்றவேண்டுமே—துயரதை
மாற்றவேண்டுமே—எனைக்காப்
பாற்றவேண்டுமே—என்முன்
தோற்றவேண்டுமே—ஒளிர்மிகு

ஞானத்தினில் முதல்வித்தஞ்
ஞானத்தினை யொருவித்து
ஞானத்தினை நிருமித்துய்
ஞானத்தினை வருவித்து

நன்குநேமித்திடுமேலா
ரங்க சாமி பணி கோலா
அந்தர்யாமியின்பாலா

ஆதி ஜோதி நீதி பாதி (மதி)

சத்திக்கணபதி சுத்த சாஹித்யம்.

இராகம் பியாக். தாளம் ரூபகம்.

சக்கும்பப்பம்மகரி என்ற வர்னமெட்டு.

பல்லவி,

சத்திக்கணபதிஉன திரு சுத்தப்பதமலர்பணிவுறு
சித்திப்பொருளது தரு முருகற்குப்பெரியவனெனவரு (சத்தி)
முத்திக்குருபரசிவனருள்வித்தைக்கொருமுதல்வனே
உமைசத்திப்புதல்வனே தரிகிடதத்தித்தரிகிடவெனவரு (சத்தி)
அங்கும்மிங்கும் நிறைஜெகமெங்குந்தங்குங்கஜமுக
ஆதாரமுன்னையலாதோர்கெதியில்லை
பொங்குங்கிருபையின் வெள்ளமிலங்கும்மடியவருள்ளம்
தங்கமுடனடனமதுங்தொங்தொங்தொம்மெனநடமிடு (சத்தி)
சொந்தப்பா சந்தத்தோன்ரங்கசாமியே
சொல்லப்பொருமாவுனது செல்வப்பெருமையைஎனது
துகளறு நாவினில்மொழியும்
அதிபெருதமிழ்மதியதுதரு (சத்தி)

ஆஹா யெக்யா ஹா—வா என்ற மெட்டு.

இராகம் தேசிகம் தாளம் ஆதி.

வா வா லம்போதரா மங்கைவள்ளிதன்கொழுநனின்சோதரா
நீவா லம்போதரா நித்தந்துதிபத்தர்தமிட் கோராதரா •
மங்களமிகுந்திலகு துங்கஞானதற்பரா
கங்கையணிசெஞ்சடைக்கடவுளருள்சிற்பரா
ஐங்கரனேயுன்னடியது பணிந்தேன்முற்பரா
ஆகமப்புராணவேத

சாகரத்துளாம்பாரத
மாகவெற்பினில்வரைந்த
வாகைபெற்றிலகுமாதி (வாவா)

ஓம் ஓம் லம்போதரா உற்றதுணைமற்றெவரிங்காரதரா
ஸ்ரீம் ஸ்ரீம் லம்போதராசித்தமகிழுத்தமக்கிருபாகரா
ஓங்குபுகழும்பெருகுமுத்தமர்கள்வாசப்பூமி
தாங்குமொற்றைமாநகரத்தநயன்கவிரங்கசாமி
பாங்குபெறவேபருளும் பத்திபுரிந்தேனேநேமி
பண்ணவர்துதிக்குமங்கம்
கண்ணியவிவேகதுங்கம்
அண்ணலானைமுகத்தங்கம்
எண்ணுமென்முறைக்கிரங்கி (வாவா)

சரஸ்வதிமாதா சரண்பணிவெண்பா.

வெண்டாமரைத்திருவே வீணைகானத்தேனே
அண்டாதிதேவர்பணியாதியே—தண்டாநும்
கல்விக்களஞ்சியமே கண்ணேவருட்கடலே
செல்வி என்னுவில்வந்துசேர்

சாரதமாதா துதி சாஹித்யம்.

தாஜராஜ என்றவர்ணமெட்டு.

இராகம் இந்துஸ்தான்தோடி தாளம் ரூபகம்,
வாணியே கல்யாணியே உன்வரமருள்வாயே—கிர்பா
வேணியே புத்தகபாணியே ரத்தின பூணியேயநீயே
மனமகிழ்வுடனனுதினமுனதிருமரு... யேன்
வந்துநிதந்துதிதந்திடவந்தரிஎந்தனை...யே
மலராயனுவினிலுறைதருதிருசாஸ...யே
வந்தனைசெய்தேனே சந்ததமும்சங்கசாமினனும்சேயே

சாமிஎனும்சேயே—
சாமிஎனும்சேயே (வாணியே)

கலைமகள் பூஜிதம்.

இராகம் கல்யாணி—தாளம் ஏக சாப்பு

கார்த்தருள் ஞானகல்யாணி
கருணைசெய் தண்டமிழ்வாணி
பூர்த்தியாய் நம்பினேன்வேணி
புருண மோனமுத்தாணி
நான்முகன்றேவியேதாயே
நாவில்வந்தாளுவாய்நீயே
வீணைகானத்தினியாயே
வெண்மலர்மீதிலுறைவாயே
என்னாளுமின்னல்படமாட்டேன்
ஏதேதுவுன்னைவிடமாட்டேன்
அன்னையே அன்புடன்கேட்டேன்
அந்தரி ஆளும்விளையாட்டேன்
உத்தமர்வாசமுறும்பூமி
ஒற்றைமாநகர்வளர்நேமி
பக்தனும்பாலகவிச்சாமி
பண்புடன்போற்றுநல்வாமி.

பேரூர் பட்டீசப்பெருமான் சாஹித்யம்.

பநாகை சிபுகா கைசிஜபீவோ என்றவர்னமெட்டு.

பேரூர்தன்னில்வாழும்தேவா பிரணவஸ்ரூபா—முன்வா வா
தாரும்நற்பதமே அரூபா தர்மசொரூபா

(தொ) மங்காதஜோதிகனகசபைதனில்
மாறியாடும்நடனஓய்யாரா
சிங்காரமேவுகங்காதாரநற்றிகழ்மணிக்ரீடா கெம்பீரா
மாதுமைவருடும்பாதாரவிந்தமே வணங்கினேன் தீரா
(தொ) சித்தர்முத்தர்நித்தம்போற்றும்
அத்தனே அரவணிந்தோனே
பக்தன்ரங்கசாமிமெத்தநத்தியேபணிந்தேன் சீமானே
முத்தியே அருளுவாய்வீரா கர்த்தனும்
மூர்த்தியேமாரா (பேரூர்)

பொன்னுலவும் பன்னிருகைவேலா என்ற
காவடிச்சிந்து வர்னமெட்டு.

சீர்பெருகும் பேரூர்நடராஜா குளிர்
திங்கள்சடைவைத்தஜெகதீசா எழில்
மங்கையுமைபக்கமுறும்நேசா உந்தன்
திருவடிதனையுறவொடுபணியடியவரிடாகவிடவருள்
செங்கனலையங்கைபெருல்லாசா விஷப்
பொங்கரவம்மங்கமணிவேசா
கார்தவழ்கோபுரமுறையும்நேயா முனம்
காலனைவதைத்ததிருத்தூயா—ஆல
காலவிடமுண்டகனிவாயா—அன்று
கரிமுறையிடவொருநொடிதனில்வலமிடவருதிடமருவிய
கண்ணபிரான் மைத்துனசுகேயா
அந்திவண்ணனெனுமண்ணலேசகாயா (சீர்)
சொந்தமுடனுந்தனையேபாடி—மிக
வந்தனைபுரிந்தனன்கொண்டாடி—மைந்தன்
ரங்குதமிட்கேவருவாய் நாடி—ஆதித்

ஐகளறுமறைமுடிவதில்நடமிடுமுதல்வனேதிவருகுவாய்
தோத்திரம்புரிந்தனுனைத்தேடி—அருள்
மூர்த்தியேவந்தனம்புரிந்தேன்கோடி

———(0)———

பன்னிருகரத்தோன் பதமலர்ச்சாஹித்யம்.

நாதா கருணைசெய்குவாய் என்ற வர்னமெட்டு.

இராகம் பிலஹரி. தாளம் ஆதி.

பலலவி.

வேலாவருள்புரிகுவாய் உமைமகிழும்
பாலா வருள்புரிகுவாய்

அனுபல்லவி.

வேதமறைமுடிவிலோதுங்குமரகுரு (வேலா)

சரணம்.

வே லா—சூரர்குலகா
லா—பமாமயில்மே
லா—வண்யகோலாக
லா—கருணைவடி (வேலா)
கா—குறையகலக்
கா—கருமால்மரு
கா—கமலதேசி
கா— சந்ததம்வடி (வேலா)
பா—ர் மனமிரங்கிப்
பா—ருன்மனமிரும்

பா—பண்ணவர்க்கரும்
பா—கெனவுரையும் (வேலா)
வா—வரமருள
வா—பரமன்சிறு
வா—ரங்கையனென்முன்
வா—னவர்புகழும் (வேலா)

ஸ்ரீ குமரக்கடவுள் திருப்பள்ளி எழுச்சி.

என்னகேள்விமுறை என்ற வர்னமெட்டு.

இராகம் காம்போதி. தாளம் ரூபகம்.

பல்லவி.

சித்திரவேலவனே இன்னம்
நித்திரையேனோ சற்றெழுந்திராய் (சித்திர)

அனுபல்லவி.

* பத்ரா சரவணமுத்தாநதியும்நித்ரைநீத்தது (சித்)

சரணம்.

சங்கமுழங்குதுசெங்கமலங்களும்
திங்களைப்போன்றுவிரிந்துவிளங்குது
தண்ணாருங்கடல்
விண்ணோர்களிக்க
அண்ணாஒலிக்குது (சித்திர)
தக்கசிறகையடித்துக்கொண்டுசேவற்

---

* துங்கபத்ரா

கொக்கரக்கோவென்றுறக்கவும்கூவுது
பக்கம்பார்ப்பவர்
மிக்க ஏசுவர்
வெட்கமில்லையோ (சித்திர)
கூவிக்கூவிஎந்தன்நாவுமுலர்ந்தது
தாவியேசெங்கதிரோன்மேலும்வந்தது
கோபமோமனஸ்தாபமோநான்செய்பாபமோசொல்வாய் (சி)
பக்தர்கொண்டாடுநல்லொற்றைநகர்வாழும்
பக்தன்ரங்கையன்மீதித்தனைவாதாமோ
பாலா குஞ்சரி லோலா மாமயில்
மேலா சீலனே (சித்திரவேல)

இராகம் மத்மாவதி. தாளம் ஆதி.

பல்லவி.

தீராவளர் பழனியூராசிங்காரா
ஆறுமுகசுந்தரவீரா அண்டரும்புகழ்ந்துதொண்டு
[செய்திடு மாரா தரா
அநவரதமுமுறைதிரு வா—ரா—தரா
அஞ்சுகக்குறத்திகொஞ்சிமுத்தமிடுமா—ரா—தரா
அன்றுநற்கிரவவுஞ்சகக்கிரியையுன்சமர்த்திஞெடி
டிந்திடப்புரியு மா—ரா—த—ரா
ஆனைமுகற்கிளையகோனே அமரர்சிறை
தானே தீர்த்திடுங்கண்யவானே—அணிவரை தனிலுறை
முருகோனே மிகுசற்குணவானே அன்புகொண்டுவந்திட
ஏனோஇவ்விதவர்மந்தானே ஆவிலையமர்சீதர
னவர்க்கின்பமருகோனே—இதுசமயம்
கானமயில்மிசையிற்றனேயமர்ந்துவா சீமானே

பணிந்தனன் பூமரனே—தமிழ்கவிஞன்
சர்ஜனர்மெச்சிடுலக்ஷணநற்கவி
தநயன்ரங்கசாமிமீது இனியுமிந்தவாதுமேது
தண்டையுஞ்சதங்கை கொஞ்சவந்திடும்
மகிழ்ந்து முன்பு வா—ரா—தாரா
அநவரதமுமுறைதிரு வாரா—தாரா

———:0:———

அமாராநபிஅஜேதூலபநேகே என்றவர்னமெட்டு
இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

ஞான சண்முகாஉனைநாடினேன்தானே
சேனைக்கதிபனே செங்கதிர்வேலனே
வானவர்க்குபகார வாமயில்மிசை ததி (ஞான)
(தொ) ஈராறுகையும் திருமுகமாறும் இலங்குகின்ற
வீரா வள்ளிதெய்வானைகொஞ்சும்விரிசுடரே
வேண்டினனுன்பாதம்
ஆண்டருளும்சதம்
தாண்டவனருளியஆண்டவனேகுகா
காண்டீபன்ரதமது தூண்டிடுமால்மருகா (ஞான)
(தொ) காடைகவுதாரிமயில்குயில்கிளிகளும்
கவினுறும்குன்றதனிலே
கூடியேவிளையாடும் குமராகுழகா சண்முகா
திருக்கழுகாசலா குருபரனே
கருதித்துதித்தேன்பாலகவிரங்கசாமியே
கண்பாரித்தினம்பண்பாயுத்தம
நண்பா சித்தர்களன்பா சத்திவேல் (ஞான)

சங்கரனிடம் முறையீடு.

நன்னபியாரேநபி என்ற வர்னமெட்டு.

இராகம் இந்துஸ்தான்தோடி   தாளம் ஆதி.

சங்கராநின்மைந்தன்கந்தன்
மங்கைதெய்வானையின்சொந்தன்
மங்கையராசைதொட்டான்
வந்துபணிவோரைவிட்டான்
இங்கிதமாகக்கெட்டான்
வேதிவ்—வாத—டாது—நீதியா   (சங்கரா)
பூசைபுரிந்தால்வரமே
புரிவதில்லையேதிறமே
வேசியர்கள்மாத்திரமே
வேண்டு—மீண்டு—ஆண்டி—யாகிய   (சங்கரா)
பெண்டாட்டிரெண்டுகொண்டான்
பின்னும்வேசிமையல்கொண்டான்
கொண்டாட்டக்கோலங்கண்டான்
குறையை—முறையா—யுறைசெய்—தேனையே (சங்கரா)
சர்ஜனர்கள்வாசப்பூமி
தாங்குமொற்றைநகர்நேமி
அர்ஜனைசெய்ரங்கசாமி
அன்பன்—இன்பன்—நம்பினேன்—சிவ   (சங்கரா)

பழனிக்குமரன் பதமலர்க்கீதம்.

அலைசேர்கடல்சூழுலகினில் என்ற வர்னமெட்டு.

இராகம் பியாகு தாளம் ரூபகம்.

பல்லவி.

பரிபூரணகருணாகரபனிமதியணிபரசிவனருள்
பக்தர்மெச்சுகுமராவுனைநத்தினனிக்கணமருள்புரி (பரி)
படர்ந்தடர்ந்துடம்பதின்கடம்பணிந்திடும்மஹா (பரி)
பரம் வரம் தரும் திறம் பெருங்கரம் பொருங்குகா (பரி)
பாகின்மொழியாள் குறமகள்பாகம் முறுமாகனஜெய (பரி)

அநுபல்லவி.

பருமால்வரையேகுடைபிடித்திடுமால்மருகாமுருகா
பக்தன்ரங்கசாமிக்கவி சித்தமெச்சவாபுவிமிசை (பரி)

சரணம்.

பண்புந்தங்கும்பழனியிலெங்குங்குங்குமவாசம்
கம்கம்மெனவீசும்படியுந்தன்சந்நிநேசம்
அன்புங்கொண்டுன்சேவடியின்பங்கின்பெருகாவடிஅணைத்துலகோர்
நினைப்பணிய கணத்தில்வருபவர்க்கரிய
வாக்கிற்குக் காக்கக்ருபை தேக்கிச்
சொற்பாக்கட்கறமார்க்கத்திற்கேற்கத்துதிப்
போர்க்குப்பவவினையறவருள் (பரி)

மூர்க்கத்தசுரரைமரணமாக்கித்திடமொடுதருண
முத்திமெத்தவுங்கொடுத்து சத்திவேற்கரமெடுத்தாய்
மோகனதேஜஸுமேவிடுவாகுளவானவர்கோன்மருகா
நினையேதொழுமாபலனேதருவாய் குழகா குகா

முங்கிக்கிரிவலமிடம்வரசங்கத்தொனியுலகமதிர
மொட்டையிட்டுனைச்சேவிப்ப ரிஷ்டமோடுனைப்பூசிப்பர்
முதிர்ந்திதம் பெரும்பதம் சதம் நிதம் எனும்விதம்
மோக்ஷத்திற் காக்ஷிப்ரண வாச்ரத்தஷ்டாக்ஷரத்துறை
சாக்ஷிக்குச்சூக்ஷிப்பொருளாச்சர்யத்தாக்ஷிக்குண
மூலமந்த்ர கோலசுந்த்ர பாலசந்த்ர ஞாலதந்ர

முகில்தவழ் கோபுரமதிலுறை
அகில் கமழ் வையாபுரிதுரை

முத்திக்கொருமுதல்வனே உமை சத்திப்புதல்வனே
தரிகிட தத்திக்கிடவெனமயில்மிசைநிர்த்தத்துடன்
வருவடிவேல் (பரிபூரண)

கோபங்கொள்ளலாகுமா என்ற வர்னமெட்டு.

இராகம் தோடி தாளம் ரூபகம்.

பல்லவி.

கோபமேனுவேலனே நல்ல
கோலாகலமயில்மேல்விளையாடியேஎந்தன்முன்வர (கோப)

அநுபல்லவி.

பாபத்தையகற்றும்பண்புள்ளசீலனே
பக்தர்கள்தன்குறைதீர்க்குஞ்சிங்காரனே
பாரிலுள்ளோர்கள்பணியும்மெய்யாரனே
பாலனுமேஉனையேமிகநாடிவந்தேன்
அனையே என்மேற் (கோப)

சரணங்கள்.

ஆதிமூலமென்றயானையைக்காத்திட்ட
அந்தமிகுமாலின்சொந்தமருகோனே
பாதிப்பிறையணிசோதியின்மகனே
பக்தனுமேதினமே மிகநத்தினேனிக்கணமே
என்மேற் (கோபமே)
சந்ததமுந்தனேவந்தனைசெய்திடும்
மைந்தன்ரங்கசாமி முன்பதாய்வந்திடும்
இந்தவாதுசெய்வதா காதுகந்தனே
ஏனோதாமதமேனினித்தானேஎந்தன்முன்வா (கோப)

அற்புதப்பூம்பொழில்நிறைந்த ரப்பர்தோட்டம்
என்ற வர்னமெட்டில் முன்முடுகு

இராகம் செஞ்சுருட்டி கண்ணிகள் தாளம் ஆதி.

விமலைதருஞ்சிவகுமரனேசற்குரு
வெற்றிவேலா—வெற்றிவேலா
உனைவேண்டிப்பணிந்தேன் வீரசத்திவேலா
கருணைமதம்பொழிகணபதி சோதரகந்தநாதா
கந்தநாதா—கந்தநாதா
கடுகமயில்மிசைஉலகமதனைவலம் வந்தநாதா
சித்திரமொத்தகுறத்தியணைத்த சிவந்ததோளா
சிவந்ததோளா—உன்
செங்கமலப்பதமெந்தன்மனத்துறவந்தேனுளாய்
திகழ்தருமங்களபூமிதனிற்
புகழ்பெரும்அரங்கசாமிசொலும்

செஞ்சொற்—சந்தம்—எங்கும்—தங்கும்
இன்புடன் (விமலே)

ஆசிரியம்.

இற்றைநாள்வரையுந்தனடியார்கள் தம்மைநீ
இனிதுகாவாதிருந்தால்
இந்தவுலகமுமேதுவானேதுபாதலமும்
ஏதுமலர்பிரமனேது
சுற்றிலெழுகடலேதுவைம்பூதமேதுநற்
சொர்க்கமொடுநரகமேது
துகளறும்விதியேதுமதியேதுவேதமும்
துலங்குசாஸ்திரங்களேது
மற்றுமாகமபுராணவிதிகாசமேதுவுயர்
வானுறுமேகமேது
மாநிலந்தன்னிலுறுஜீவகோடிகளேது
மகிமையுனதருளிலாது
சற்றுமறிவில்லாதமூர்க்கனாயேனையித்
தருணத்திலாதரிப்பாய்
சரவணபவாகந்த பிரணவமஹானந்த
ஸ்வாமிஷண்முகதெய்வமே

கழுகாசலத்தினமர்வோனே என்றமெட்டு.

அடுக்குச்சந்தம்.

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி,

பழனிமலைக்குளுறைவோனே. புண்ணவர்கோனே (ப)
நற்பரிமளமணங்கமழ் (பழனி)
பணிந்தவன்பர்கள்பவமதமதுபுரி (பழனி)

பதம்சதம்மிதம்நிதந்துதிபெரும் (பழனி)
பசுபதிமைந்தன்விகஜிதகந்தன் (பழனி)
பட்சத்துடனமராபதி மகளின்பக்கத்தேய்மருங்குருதெய்வம் (ப)
பரநாரிகளின்மையலாலலையுங்குறைவேதனை
தவிர்த்திடுவானுயர்தென் (பழனி)
பங்கஞ்செய்யுஞ்சிங்கன்றுருகனங்கங்கொய்யுஞ்செங்கைவேலவன் (ப)
பாரதமேருமஹாகிரியின்வரைவாரணமாமுகனாருஞ்சோதரன் (ப)
பாலாபிஷேகன் மேலானயோகன் (பழ)
பங்கயன்மனங்குழப்பவெஞ்சிறைவிதித்தவப்பன் (பழ)
பரிதியினிரதமதுறைதருகிரிமிசைபரிவுடனமர்ந்திடு
மரகதமயிலோன் (பழ)
பத்தர்நத்திமெத்தவுந்துதித்திடும் (பழனி)
பரிபுரபவ பவமொழிபவ சரவணபவ சயமொழிபவ (பழனி)
பஞ்சாட்சரவைமுகனின்செவியில்விஞ்சாட்சரப்ரணவம்
முறைதந்தோன் (பழனி)
பந்தஞ்சொந்தந்தந்தன்புடனமர் (பழனி)
பாக்குடன்வாழைபலாமாமுங்கனதேக்குடன்தாழை
திகழ்ந்திடுசந்தண (பழனி)
பாலகவிபபெயரேநிறைவாசன்
பார்புகழொற்றைமாநகரதில்வாசன்
சீலன் அரங்கசாமிநன்னேசன்
செஞ்சொற்சந்தப்பாவணிந்திடுகந்தப்பன்செங்கடம்பணிந்திடு (பழ)

வெள்ளியங்கிரி ஆண்டவன் வேண்டுதற்பாசுரம்.

ஆசிரியப்பா.

மண்ணெடுத்தடிபட்டுவாணிச்சிபிட்டதனை
வாங்கியுண்ணவுமில்லையோ—

மலையரசன்மருகனுய்வந்துமதுராபுரியில்
மணமதுமுடிக்கவில்லையோ—
திண்ணமாய்ப்பத்திபுரிகண்ணப்ப* னுச்சிஸ்ட்ட
சிறுவூனருந்தவில்லையோ—
சேமக்கலங்கொட்டியேமலர்க்கரமதிற்
றினமிரக்கவுமில்லையோ—
கண்ணியமுடன்காலைவிண்ணினிலெடுத்துக்ர
காளியுடனுடவில்லையோ
கமலமுகமாதுவம்பிகையினேர்பாகங்
கலந்திருக்கவுமில்லையோ—
எண்ணரியஜீவனில்யாருெருவனல்லவோ
என்னையாட்கொளலருமையோ—
இந்துமண்டலமுயருவிந்தைபெருவெள்ளிமலை
இலகுசுந்தரதெய்வமே—

இராகம் பைரவி தாளம் ரூபகம்.

பல்லவி.

வெள்ளிமலைக்குநாம்நேரேசெல்வோம்
வேல்விழியாளேநீவாராய்சீராய் (வெள்ளி)
விரைந்துநடந்துகுகையதையடைந்துபவமொளிந்திடவே (வெள்)
விரும்புவரந்தருஞானக்கரும்பென்றிடுவோமோன (வெள்)
வேண்டிடிதோபூண்டிதனில்ஆண்டவனின்நீண்டகிரி (வெள்)
விநாயகனின்மலையிதுவநேகமைல்துலையதுவே (வெள்)
விருப்புடன்பொருப்புடன்சிறப்புடன்வாமயிலே (வெள்)
விந்தைமிகுந்திடுகிரியேசுந்தரியேபாரடியே (வெள்)
வேணலட்சமாவிருக்ஷமேமிகுத்துவானைமுட்டும் (வெள்)

---

*எச்சில்

மின்னனையாளேபாராய்கண்ணியமொடுபதிலகூறாய் (வெள்)
மேகந்தவழுங்குயில்மயிலேகங்குலவும்மிகுசுடர்
வித்தகர்க்குமுத்திதந்தபித்தனைத்தினம்பணிந்து (வெ)
வினைகளறச்சுனைமுழுகிக்கனிவொடுளக்களகமற (வெள்)
விண்டுறையண்டர்களண்டிடுதொண்டர்களும்பணிகொண்டிடு
மெச்சிடுலக்ஷணமுற்றிடு அர்ஜுனனஸ்திரம்பெற்றிடு (வெள்)
விடைதனிலடைவொடுவமர்சிவனுடைபுலியாடையிடையணி
பவன் (வெ)

அனுபல்லவி.

புள்ளிமயிலில்பொருந்துநன்னீதன்
போதமுறைசெவியேற்றிடுநாதன்
கள்ளிமகிழுங்கருணைப்ரசாதன்
காலகாலன்சூலபாணிஆலகாலமுண்டவேணி (வெள்)

சரணங்கள்.

காவலரும்பூவதனைத்தேவையுடன்தாவியெடுத்
தேவடியேனுவனுடன்மேவியுனக்கேயணிவேன்
கூவுமுறைக்கேவருவாய்பாவலருக்கேகுருவாய்
பூவினுளோர்க்காதரவாய் கோவிலிலாதேயுருவாய்
பொங்கரவம்புலியும்புனைசங்கரவுன்சிரமீதுயர்
கங்கையுடன்பரிவோடினமிங்கனம்வந்திடவுன்மனம்
வண்கலெனும்படிநொந்திடவிந்தவிதந்தடையேது
சொலிந்திரதேவர்பணிந்திடுமந்திரமானசுதந்திர
பொங்கியமேகமெனப்பொழிசந்ததிறைந்திடுமுத்தமிழ்
ரங்கசாமிக்கருளைத்தருமங்கையோர்பாகனமர்ந்திடு (வெள்)

திருப்பரங்கிரியோன் திருவடிவணக்கம்.

இராகம் தந்யாசி தாளம் ஆதி.

பல்லவி.

திருப்பரங்கிரிஎனும்பருப்பதமதிலுறை திகழ்சரவணபவனே

அநுபல்லவி.

வரப்பொருளுந்தனையெப்பிறப்பிலும்நான்மறவேன்
வள்ளிதெய்வானைமகிழ்புள்ளிமயில்வேலனே

சரணம்.

அண்டர்கொண்டாடுந்தெய்வம் தண்டாயுதாநீயல்லால்
அன்றிவேறெனக்காரோ
கண்டகாரானசூரர்மண்டையைப்பிளந்தவா
தண்டமிழின்முதல்வாதொண்டுசெய்தேனுன்பதம் (திருப்ப)
கும்பமுனிக்கருளும்சம்பிரமனேஐய்யாரா
நம்பிப்பணிந்தேன்வீரா
அம்பிகையின்குமாரவம்புசெய்வதீரா
துன்பமொழிக்கும்தீராசோதிக்காதேஐய்யாரா (திருப்ப)
மைந்தன்ரங்கசாமியின்சந்தக்கவிக்குகந்து
சிந்தைமகிழவருவாய்
மந்திரவேல்முருகாதந்திர்மால்மருகா
சுந்தரமானகுகா சூதுவேண்டாம்சண்முகா (திருப்)

கலிமேலா என்ற வர்னமெட்டு.

இராகம் அபுரூபம் தாளம் ஆதி.

பல்லவி.

அருமாமறைமுடிவிலிலகுகுருபரவறுமுகசரணம்இதுதருணம்

அநுபல்லவி.

திருமால்பெருமருகனேஉனதடி
தினந்துதிபுரிந்தேனே சீமானே (அரு)

சரணங்கள்.

வீணாகியஜெனனமதிற்பிறந்துவெருவியே
உழன்றேனே பூமானே
காணுமலேகாலன்வருமுனமே
கடுகிவந்தருள்தேனே வேலோனே
தஞ்சம்உன திருபங்கயபததயவது
புரிவாயேகதிநீயே
கொஞ்சம்மனமிரங்கலையோபுகழ்
கொண்ட அண்டரண்டுதொண்டு செய்திடும் (அரு)
தாலமதிலேகலிகாரணசரவணபவகுகனே உமைமகனே
பாலன்ரங்கசாமிக்கவிக்குகந்துபதமலர்தரு
கோனே வாதேனே (அரு)

இராகம் தேசிகதோடி தாளம் ஏகம்.

கண்ணிகள்.

நித்தநித்தம்பத்தர்நத்தியுனைப்போற்றும்
சித்திரவேற்கையனே—தினந்துதி

பத்தனும்ரங்கையனே
சூராசம்மாராஓய்யாராகெம்பீராகற்
சுந்தராசுப்பையனே—உமைபெற்ற
கந்தாசரவணனே
(தொ) ஓங்காரரூபாசிவன்காதிலோதும்
உண்மையானந்தமுருகா
ஸ்ரீங்காராசேவற்கொடியேபிடித்தாய்
சீதாபிராமன்மருகா
சிங்காரமங்காதகங்காதரன்மகிழும்தீரா
வள்ளிலோலனே தெய்வானைபுகழ்
கோலாகல்சீலனே
வர்னமயில்மிசைஉன்னிதமாகவே
வாரும்குமரேசனே—திருவருளைத்
தாரும்செந்தில்வாசனே (நித்த)

அடுக்குமல்லிகைதொடுத்தமெத்தை என்றவர்னமெட்டு.

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

விரித்த*சிகியில்நிருத்தசண்முகனே இவ்வேளைவந்தென்
வருத்தமகற்றும்குறத்தியின்சுகனே உனை
வேண்டிடுமெனையாண்டிடுமருள்பூண்டிடும்ஜெக தாண்டவா
இனி வேறுநற்கதியாருமிங்கிலையே தேவாதிதேவா
காருமித்ததிசிரிதுவலையே
அமரர்பணியும்குமாரதேசிகனே முன்னாளிற்சூரர்
அகந்தையொளித்தபழங்கிரிக்குகனே—புகழ்
ஆதியேவளர்நீதியேதரு ஜோதியேபுவிமீதிலேதிகழ்
அன்பன்ரங்கசாமிக்குகந்தவா—அன்னாளிலுலகை
அரைநொடிதனில்வலமிடவந்தவா (விரி)

* மயில்

னத்தபவத்தை யொளித்திடுங்குமரா கலியாணிபெற்ற
கருணைமிகுக்த குமரனே அமரா—நல
காவனத்தினிள முடுக்கிய மாலினுக்கன்பு சேர்மருகனே
கமலசுந்திரவதனசிங்காரா மங்கைமார்களிருவர்
களித்திடுங்கனவேலலங்காரா (விரி)

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே என்றமெட்டு.

இராகம் தேசிகதோடி — தாளம் ஆதி.

பல்லவி.

ஆடுங்கள் ஆடுங்கள் ஆடுங்களே கண்டு
பாடுங்கள் பாடுங்கள் பாடுங்களே (ஆடு)

அநுபல்லவி.

அத்தன்மகன் தரிசனமே
சித்தமகிழத்தினமே (ஆடு)

சரணங்கள்.

அண்டர்கொண்டாடும் அமுர்தமெஞ்ஞான
அன்புநிறைந்திடுந் தந்திரமோன
கண்டகரின்சிர கண்டனதீன
காரணமே மிகுமாரணன்றனைக்கண் (டாடு)

சேருங்கள் சேருங்கள் சேருங்கள் ஆனந்தம்
பாருங்கள் பாருங்கள் பாருங்களே
சிங்காரமானகுகன்
வங்காரவாறுமுகன்

68035

சேவற்கொடி தனை மேவிப்பிடித்தவன்
காவிற்குறத்திமின்னுவல்படித்தவன்
பூவிற்கலியுகப்பேருமெடுத்தவன்
புண்யசெம்பீசவெரய்யாரன்றன்னைக்கண்டு (ஆடு)

வாருங்கள் வாருங்கள் வாருங்களே களி
கூறுங்கள் கூறுங்கள் கூறுங்களே
வையாபுரிமுருகன்
மெய்யானமால்மருகன்
வந்தனையேபுரிந்தின்புடன்கூடி
வாகுடன்காவடியேயெடுத்தாடி
சொந்தமுடன்ரங்கசாமிசொல்பாடி
சுந்தரனைச் சோதிக் கந்தனை நாடி (ஆடு)

செந்தூர் முருகன் திருவருட் சாஹித்யம்.

இராகம் செஞ்சுருட்டி. தாளம் ஆதி.

பல்லவி.

திருவருளும்பொலிகலியுகசுந்தரதீரா—செந்தூரவாவர்
சித்தமகிழ்ந்தே என்முன்வா—செந்தூரவாவா
சித்தமகிழ்ந்தேஎன்முன்வா
திடமுடகூடியவரிடமயில்நடமிடுதீரா—செந்தூரவாவா
சித்தமகிழ்ந்தேஎன்முன்வா
செந்தூரவாவா சித்தமகிழ்ந்தே என்முன்வா
தேனெழுதுந்தினைமாவை யருந்தென நாணமொடும்புக லீனகுலம்
பெரு சித்திரமொத்த குறத்தியைமுத்தமதிட்டுவணைத்திடு முத்தமு
சத்திய தீரா செந்தூரா வாவா சித்தமகிழ்ந்தேஎன்முன்வா
சினத்தவசுரர்கள்சிரமதுவறுபட
கனத்தவேல்விடுமறுமுகசரவண

சித்தரு முத்தரு மெய்த்தவர்நத்திடு கர்த்தனே பத்திமனத்தொடு
போற்றினன் நீராசெந்தூராவாவா சித்தமகிழ்ந்தேயென்முன்வா

அலங்காரத்திருமேவயுனைநாட
அடியேன்உனைப்பணிந்தேன்வினையோட
நலங்காணும்ரங்கசாமிசொல்பாட
நம்பிக்கைத்தாளம்பலபோட

நானேஉனைக்கொண்டாடினேன் செந்தூரவாவா
நானேஉனைக்கொண்டாடினேன் (திருவ)

மனோகரமானே மயிலேதேனே என்றமெட்டு.

இராகம் கேதாரகெளளம் தாளம் ஆதி.

கண்ணிகள்.

பதந்தருவாய் திருப்பழமலைவாசா
பழமலைவாசா பத்தரின்நேசா
பாலன்குறையதனைத் தீருமுல்லாசா (பதந்)

பதம்பணிந்தோர்க்கு
பவவினைநீக்கு
பக்திரசச்செந்தமிட்பாச்சுவைநோக்கு (பதந்)

மலரணிதோளா
வள்ளிமணாளா
மங்கையரின்மையலேதங்குதணாளா (பத)

சூரசம்மாரா சொகுசலங்காரா
சுந்தரியாமந்தரி சொந்தகுமாரா (பதந்த)

சந்ததம்பாடி
வந்தனைகோடி

தான்புரிந்தேன்சங்கசாமிகொண்டாடி
மால்மருகோனே வர்மமென்தானே
மயில்மிசைநடமிடு மந்ரவேலோனே (பதந்தரு)

பஜாயுமேதில்பேல என்றமெட்டு.

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

வருவாய்என்முன்னமே மாவேலா இங்கு
வந்தருளும்வர்னமயில்மேலா (வருவாய்)

மைந்தன்முன்வந்துவரம் தந்தருளாகாதா
சங்கரன்பாலனேஎன் ஜாலமிதுமெய்ப்போதா
தந்தையென்றேநம்பினேன் தாயன்முன்னினம்வாதா—இவ்
வாதுபுரியாதேமாவேலா—இங்கு
வந்தருளும் வர்னமயில்மேலா (வரு)

சந்ததமுந்தனையேசிந்தைமகிழ்வாய்ப்போற்றும்
சந்தக்கவியரங்கசாமியையேகாப்பாற்றும்
கந்தாஉனக்குஎனக்கருணையில்லையோசாற்றும்
இவ்வாதுபுரியாதேமாவேலா இங்குவந்
தருளும்வர்னமயில்மேலா மிகுவாதுபுரியாதேமாவேலா (வரு)

குயிலே இன்னுங்கோபமாகுமா என்றமெட்டு.

கண்ணிகள்.

அருள்பழனிஆதியேமுன்புவா—வா
திருளதுசேர தீவினைதீர
திருநடனமாடியே முனபுவாவா (அரு)

குறவள்ளியோடு குகனேநீநாடு
குலவுமயில்மீதிலேறியேவாவா (அரு)

உனைநம்பினேனே உதவுஞ்சீமானே
ஒருநொடியிலோடி என்முன்னம்வாவா (அரு)

பன்னிருகையா பாதுகார்மெய்யா
பணிந்தேனடிப்பாலனென்முன்னம்வாவா (அ)

இந்தவாதேனே இதுவர்மந்தானே
எளியன்மீதிலேதிவ்வாதென்முன்வாவா (அ)

சங்கரன்பாலா இங்கிதவேலா
சாமியேஉனைநம்பினேன்முன்னம்வாவா (அ)

சந்ததம்பாடி வந்தித்தேன்நாடி
தநயன்ரங்கசாமிஎன்முன்னம்வாவா (அருள்)

விமலைமாது என்றமெட்டு.

ஆறுமுகத்தெய்வமே முன்வாராய்வாராய்இனி
வேறுகதியாருமில்லை காராய் காராய்

அரியஞானபரணவமான மொழியைவேதமலரினன
அயனுநாணவடியர்பேண வமூர்தகாணசுகுணமோன
ஆதிநாதர்க்கன்றுரைத்த கந்தா கந்தா இனி
சோதிக்கவொண்ணுதுவரந் தந்தாள் தந்தாள் (ஆ)

வனசநேசமுகவிலாசகுறவர்மாதையுனதுபாச
வலையினாசவினிதுபேச மதனுலாசகலவிவாச
மதனையேபுரிந்துமணம் கூடி கூடி செய்தாய்
உனதுபக்தியேபுரிந்தேன் நாடி நாடி (ஆ)

மயிலின்மீதுவாவும்வாதுபுரிவதேது
இதுதகாதுமனதிலோதுமடியர்சாதுவுனையலாது
இனியுமேதுமற்றுந்தெய்வம்சத்திவேலா

கார்த்திகார்த்திகேவா பக்தன்ரங்கசாமிபதம்
சீர்த்திசீர்த்திஎத்திசையினும்பாவுங்கீர்த்தி கீர்த்திதாரும்
உத்தமனே தண்டபாணிமூர்த்திமூர்த்தி (ஆறு)

இந்தவுடம்பைநம்பியிருக்கலாமா என்றமெட்டு.

இராகம் பியாகு தாளம் அடதாளசாய்பு.

பல்லவி

மந்திராநந்தா கந்தாவடிவேலனே சிந்தை
மகிழ்ந்தாளந்தரியின்பாலனே (ம)

அந்தரதேவர்பாடி வந்தனைசெய்வர்நாடி
செந்திலமரும்கந்தாவடிவேலனே
உள்ளமகிழும்வள்ளியுரும்பாகனே
புள்ளிமயில்மேல்துள்ளிவரும்போகனே
கள்ளமில்லாதநேசருள்ளமதனில்வாச
எள்ளினுள்ளெண்ணெபோன்றவெழில்வேலனே (ம)

காவினில்மாடுமேய்த்தகண்ணன்மருகா
வாவிசூழுந்தென்பழனியில்வாழ்முருகா
பாவிநாயேனும்வாடி கூவினேன்முறைகோடி
தாவியே என்முன்ஓடி வாருங்குழகா (ம)

சந்ததமுந்தன்மீது தமிழ்சாற்றினேன்
மைந்தனும்ரங்கசாமி மிகப்போற்றினேன்
கந்தமலரைத்தூவி விந்தையுடனேசேவித்
திந்தவிதமே ஜாலமேனோவேலனே (ம)

செந்தாழம்பூவுந்தேனுங்கமழ் என்றமெட்டு.

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி

பல்லவி.

செந்தேனும்பாலும்பாகும்பொழிந்தினிக்குநல்லபிஷேகனே (செ)

கொந்தாரும்பூம்பொழில்சூழ்
கோலத்திருப்பழமலைவாழ்
குறமகடனைமருவியவறுமுகசரவணவரிமருகனே (செ)

மந்தாரஞ்சேருந்தாரும்பரி
மளிக்குமங்கலமார்பனே
சிந்தானந்தக்குமரா
சிவகாமிசற்குமார
திருப்புகட்கவிவிருப்புடன்பெருமருட்
பெருங்கடல் விருப்பொடுவருள் (செ)

வந்தாளுந்தார்விந்தாரபத
மலரடிபணிந்தேத்தினேன்
கந்தாவென்கற்பகமே
கருணைபுரிவிற்பகமே
காரும்ரங்கையனைப்பாரும்பரிவுடன்
சேரும்வரமதுதாரும்பரம்பொருட் [செ]

ஆசிரியவிருததம்.

பஞ்சவர்கள் தூதனுக்கின்பானமருகனே
பத்தர்பணியும்முருகனே
பாரதத்தினைமேருகிரியில்வரைவாரணன்
பாந்தசோதரகுழகனே
வஞ்சகச்சூரரைமடித்திட்டசத்திவேல்
வலதுகாமேவுகுகனே

வயங்குசேவற்கொடியிலங்கிடுமலங்கார
வன்னமயிலாறுமுகனே
தஞ்சமெனவேயடைந்திட்டவர்கள்மிடிதனைத்
தாமொழித்திடுகுமரனே
சத்யலோகானந்தவாணிகேள்வன்றனைத்
தக்கசிறையிடுவமரனே
கஞ்சபதவந்தனைகனிந்துபுரிமைந்தனைக்
காத்திடவிரைந்துவருவாய்
கமலமுகவிமலையருள்குமரசரவணபழனி
அருணைபொழிகந்தவேளே

தெண்டபாணித்தெய்வ தரிசனசாஹித்யம்.

பல்லவி.

தெரிசனம் தெரிசனம்
ஜென்ம சாபல்ய முருகன் [தெரி]

அநுபல்லவி.

ஜெகமேபுகழ்தெய்வமாமறுமுகனுங்குகன்பருவவுருவ [தெ]

சரணங்கள்.

தினமுவந்துதவசிரேஸ்டர்செய்யும்மந்த்ரகோஷ்டமே
செப்புதற்கரிததேஜெனமிகுந்தகூட்டமே
வினயமோடுவரகராவெனமுழங்கார்ப்பாட்டமே
விந்தையேமிகுந்தமச்சக்காவடியினாட்டமே
மனைவியர்களிருவர்பக்கமகிழுறுங்கண்ணோட்டமே
வள்ளிதெய்வயானையோடுபுள்ளிமயில்சீட்டமே
மங்களாகரன் உயர்
சந்திரசேகரன்—மைந்தன்
எழிலிலங்குஞ்ஞானகந்தன்வடிவுறுமெஞ்ஞான [தெரி]

கற்பூரஜோதிமணங்கலந்தநற்ப்ரகாசமே
கந்தமுப்புனுகொடுஜவ்வாதுளங்கும்வாசமே
மற்புயப்பொருந்தமேவயமர்ந்தமந்திரகாசமே
மாசிலாதவன்பர்தட்டும்வண்மைக்கரகோஷமே
சிற்பசாத்திரத்திறத்திற்சித்திரித்தபதுமையே
தேவலோகமீதெனச்சிறந்துரைக்கும்புதுமையே
கைத்திறமிகுந்தவிஸ்வகர்மன்செய்தமகிமையே
காட்சியேபழனிமலைக்கர்த்தனுக்கென்னுவமையே

காணிலோ சுபாஷிதம்
கவியரங்க தாஸ்நிதம்

கண்டவருமைக்ஷேத்திரமிதிலண்டர்முனிவர்தோத்திரம்புரி [தே]

மானேமடமயிலேதேனே என்றமெட்டு.

இராகம் தேசிகதோடி — தாளம் ஆதி.

கண்ணிகள்

வேலாவிமலைத்ரும்பாலா மெஞ்ஞானகுணசீலா
வேண்டினேனனுகூலா—விரித்தசிகியில்நிறுத்தனைவடி [வே]

ஏதுஎன்முன்னம்வரவாது இனிச்செயலாகாது
உனைவிடேனிப்போது—இனித்தகுறத்திமணத்தைமுடித்த [வே]

சூரசம்மாராசுகுமாரா துணைதருமெய்யாரா
சுப்பிரமண்யவீரா—சொந்தமதென்றுனைநம்பினனின்புடன் [வே]

தஞ்சம்உன்னிருபாதகஞ்சமலரடியென்னெஞ்சம்
தனில்நினைந்தென்வஞ்சம்—தகைமைபெருகுமுருகாவருக [வே]

பூமிபுகழும்சங்கசாமிபுகன்றிடும்வேல்சாமிபுரிந்தன்று திநேமி
புதுமை புதுமை புதுமைப்பழனி (வே)

ஸ்ரீவிஸ்வகர்மன் தொழிற்பத்திராதிப என்ற வர்ணமெட்டு.

இராகம் கல்யாணி தாளம் சாப்பு ஆதி.

பல்லவி.

தேனுபிஷேகந்திகழ்பழனிக்கந்தன்
தீர்த்தப்ரசாதம்தினமானந்தம் (தே)

அநுபல்லவி.

வானோர்களுக்கன்றிடர்தீர்த்தவன்வள்ளி
மாதெய்வயானையணைகார்த்திகன் (தே

சரணத்தொகை௵

ஞானமெஞ்ஞானகுணசீதனே
தீனதயாபரனேநாதனே

முடுகு

களிணமயிலதனில்நடிக்குங்கெம்பீரன்
புளினமுலவுமலைப்புரியமர்வீரன்

பல்லவி எடுப்பு

நாலாம்பதந்தந்திடுங்கந்தனே ஆல
கர்லவிடமுண்டவன்மைந்தனே (தே)

தொகையறா

பாராதியோர்களும்சிராதனைபுரி
பண்ணவன் சத்திவேலோன்
போராறுமுகங்கொடுமாறிரண்டேகை
பிறங்கிடும்ப்ரணவமேலோன்

முடுகு

பனிமலாதுகொடுபதமலர்சாத்தி
பரிவுடன்பணிந்திடவரமருள்மூர்த்தி

பல்லவி எடுப்பு

பக்தன்ரங்கசாமிமுத்தமிட்சங்கீதபஜனைதனக்
கன்புதருசண்முகன் (தே)

மடமாதே மையல்மீறுதே என்றமெட்டு

இராகம் பைரவி தாளம் ரூபகம்

பல்லவி

வடிவேலாமயில்மேலா
வரந்தந் திடும்பொன் கடம்ப மலர்கோலா (வடி)

வளப்பெரும்பழமலைதனிலிலங்கிடுங்குருபரவெழில் [வ]
மத்தகத்தனக்குறத்திமுத்தமிட்டணைத்தசத்தி (வ]
வரமருள்சரஹணபவஜெயமுரஹரிமகிழ்மருகனே ஈப (வ)
வணக்கம்புரிபவர் வினைதனைக்கொய்திடுமரஹர (வ)
வஞ்சகமேனேதஞ்சமென் றேனேகொஞ்சமுன்வாரும் ரஞ்சிதமான
வாலைபெற்றபுத்ரசுப்ரமண்யகர்த்த ஜாலமூதவாது இத்தினத்திலசுத்த

அநுபல்லவி

அடியார்களினன்பிற்குகந்தநல் ஆறுமுகாமுருகா
ஆறிருகரனேவருவாய்தநி (வ)

சரணம்

பூதலம்புகழ்ஒற்றைமாநகரப்—புதல்வன்செந்தமிட்சந்தமேவளரப்
பாதம்பணிந்தேன்பாலகனித்திற
பக்தன்ரங்கசாமிக்கவி—சித்தமொப்பிவாநறறதி
பதந்தொந்தொமெனநடமிடு—சிதம்பரன்மகிழ்புதல்வனே
பாகயோகசுகுணகரவாதெய்வானைமயில்மேலுற (வ)

அருள்செய்வாய்தநியேமயில் என்றவர்ணமெட்டு

இராகம் தேசிகதோடி தாளம் ஏகம்

பல்லவி

குமரனேகலியுகந்தனிற்குலமுதற்கடவுள்மெஞ்ஞான (கு)

அநுபல்லவி

அமரனே அமரர்கள்பணிஅமரனே அதிக்ரசூரரை
வதைத்த சத்திவேல் (கு)

சரணத்தொகையுறு

ஆலமுண்டவனீன்ற அருமைக்குமாரனும்
ஆறுமுகமானமெய்யன்
தாலமதிலவன்புகழ்தான்சொலத்தாமன்று
சாஸ்வீதமான துய்யன்

அநுபல்லவியின் அரைச்சீர் எடுப்பு

தனைப்பணிந்தவர்க்கனைத்தும்சித்தியாங் (கு)

தொகையறா

கிரவுஞ்சகக்கிரியின்கெருவமேபட்டிடக்கிழித்திடும்
அயில்பிடித்தோன்
பிரமனைக்குட்டியேசிறைதனில்வைத்திட்ட
பிரபஞ்சசிருஷ்டிதத்தோன்

பாட்டு

பிரபலமிகுவறுமுகவடிவழகனெந்தையெம்ப்ரபுவரஹா (த)

தொகையறா

பூமிபுகழும்ஓற்றைமாநகரநற்கவிப்புத்திரனரங்கசாமி
பூந்தமிழ்மாலையணிசாந்தசண்முககுகப்புனிதநற்கந்தசாமி

பாட்டு

பொதிகைமுனிவர்க்கருளுமுத்தமிட் (கு)

திருவாலவாய்மீனாட்சியம்மன் திருவருட் சாஹித்யம்

காமரசக்குயிலே என்ற வர்ணமெட்டு

இராகம் கல்யாணி தாளம் ரூபகம்

பல்லவி

மீனலோசனியே இந்த
வேளை—வந்து—ஆளுந்—தாயே (மீன)

அநுபல்லவி

வானவர்பணிமானே காரணி
வரமது தரும்பதவு தாரணி
ஞானமந்திரகளின காரணி
நாயகீ—முன்வா—என்தாயே (மீன)

மங்களாகரமயசிங்காரிணி
மாணிக்கமாங்கல்ய தாரணி
இங்கிர் தருணா இறைவிநாரணீ
வனிவ்—வாது—தாமெனன்—தாயே [மீ]

சாம்பவிமுரஹரிசகோதரி
தருணமீதுவந்தெ தன்னையாதரி
காம்பரிஎழில்கனவித்யாதரி
காரும்—நேரில்—வாரும்—தாயே [மீன]

சங்கரி திரிபுரை காமாட்சி
சாதுசர்ஜனர்க்கருள்மீனாட்சி
ரங்கையன்கவிக்குதவும்சாட்சி
நம்பி—னேனுன்—மைந்தன் தாயே (மீன)

முத்துக்குமரையனே என்றமெட்டு

இராகம் சங்கராபரணம் தாளம் ஆதி

பல்லவி

சத்திவடிவேலனே

அநுபல்லவி

சித்தி—தாரும்—சீலனே (சத்தி)

சரணங்கள்

ரத்தமாம்சமொடமைத்தனுலமிது
பக்தியில்லாஜென்மம் அத்துயர்
நிவர்த்திசெய்யுங்கன்மம்—தர்மம் (சத்)

சத்திபெற்றதிருபுத்ராத்னசுரர்
மெத்தமெச்சுதாரா நித்தமும்
நத்தினேனே வாராய்—சீராய் (சத்)

தஞ்சமென்றுதுதி பஞ்சையின்மிடியைக்
கொஞ்சம்தீரநேமி அத்துவித
விஞ்சையான சாமி—வாமி (சத்தி)

பொங்குநாகமதிற்றுங்கமாயுரையும்
ரங்கநாதன்மருகா—தங்கநிற
அங்கமேவு முருகா—வருக (சத்)

ரங்கசாமிபணியுங்குஞ்ளாவெழில்
தங்குமின்பதாதாதிங்கள்முக
மங்கைவள்ளிநாதா—நீதா (சத்தி)

ஸ்ரீ விஷ்ணு கீர்த்தனங்கள்

ஸ்ரீவிஸ்வகர்மன் தொழிற்பத்திராதிப என்றமெட்டு

இராகம் பியாகு தாளம் ஆதி சாப்பு

பல்லவி

ஆதாரமாயுந்தன்பாதாரவிந்தமதே
நம்பினேனென்றுமானந்தனே

மாதாபிதாவும்நீ சிதாசமேதாயிவ்வாதேன்
மஹாநந்தகோவிந்தனே

(தொ) நாதா சங்கிகா யசோதா சுதா
பிதாப்பராவேதன்தாதா சதா

முடுகு

நறுமலரதுகொடுபதமலர்சாத்தி
பரிவுடன்பணிந்திட வரமருள்சீர்த்தி
நாகத்திலாடுந்தயாசித்தனேமங்கை
பாகத்தன்மைத்துனனேசுத்தனே (ஆ)

(தொ) மாலானவா ஆதிமூலாமேலா
தாலமெலாமுண்டபாலர்சீலா

முடுகு

மறைமுடிவதிலுறைமுரஹரிவாரர்ய்
விரைவுடனுனதுசெங்கருடனில்நோர்ய்
மங்களமெங்கும்விளங்கிடவே ரங்கு
செந்தமிழ்சந்தம் முழங்கிடவே (ஆ)

தோகைமலை ஸ்ரீரங்கநாதர் துதிசாஹித்யம்

பாலராமனையனே என்றமெட்டில் பின்முடுகு

இராகம் தேசிகதோடி தாளம் ரூபகம்

பல்லவி

தோகைமலைரங்கனே (தோ)

அநுபல்லவி

தோத்திரப்ரங்கசாமியும்புரிந்தேத்தினளினதடியிணைதனை
சுத்தசித்தவுத்தமர்க்கருட்கருத்தமெய்த்திறந்த
ஜோதிக்கருமுகில்வண்ணா
நீதிக்குலராமண்ணா
சுகமேதருமிகழும்பாழும்மருளுந்திருநாரண
,மிகயோசனையேதினியே அனையேபவமொளிகாரண
சோதைபெற்றெடுத்துமுத்தமேயளித்தநற்சுபுத்ர
துளவாபரணாதயிர்பாற்
களவாடுமனோகரனே
துதிபுரியடியவர்வினையதுபொடிபடநொடிதனிலுலகினில்
தோகைபெற்றகருடன்மீதாரோகணித்துவாரும்வாரும் (தோ)

சரணம்

வாகை பெருத்தவில்வீராதீரா அன்று
வம்சத்தொடுங்கர்வராவணனைக்கொன்று
பாகுமொழிசீதாதேவியின்முன்னின்று
பட்சத்தொடுமொழிவிதமதுலச்சைசப்படவுரைதந்தது
பாங்கா பின்னிதி லிங்கா வம்மனுந் தாங்கா வெங்கண லோங்க
சூழ்கியுன்பாதத்தைத்தரிசிக்க
மேன்மையுற்றதேவரும்கோதற்றபுஷ்பத்தைவருஷிக்கயாவரும்
பரிவுடனேகண்டாட
அரனயனுங்கொண்டாட
பக்தவிலக்ஷணமாருதி லக்ஷ்மணலக்ஷ்மியோடுறு
பராக்ரமக்கோலசொந்த
வயோத்தியில்முடிபுனைந்த (தோ)

முருகன் திருமால்மருகன் பெருமை என்றமெட்டு

இராகம் அடாணா   தாளம் ரூபகம்

பல்லவி

கருடன்மீதிலேறிவாராய் நாரணா—செங்
கமலமுகத்திருவுடனித்ததிடகிழக்கருணையுடன் (க)

அநுபல்லவி

ஒருக்காலுந்தன்பாதமலர்கண்டால்
உறும்பவமுமறுந்திகிரிபெருங்கைபெருமுகுந்தனே செங் (க)

சரணம்

சீர்த்திமிகுந்தவுன்சேவடியைக்கண்டு
சேவிப்பதெக்காலம்—கெட்ட
தீவினைதன்னையுநீக்கியேவுன்னடி
சேர்வதுஎக்காலம்
கார்த்துரக்ஷிக்கயிதுவெகுநற்காலம்
கருணையோடுரங்கசாமியையிக்காலம்
பார்த்துப்பணிந்தேன் பரமனே முக்காலம்
பரிவாகவே அரியே அதிவிரைவாகயித்தருயே செங் (க)

பரமபதநாதன் பதம்பணிசாஹித்யம்

வரமுலுசகிப்ரோசுடனி கருதா என்ற வர்ணமெட்டு

இராகம் கீர்வாணி   தாளம் ரூபகம்

பல்லவி

பரமபதமனோகரனே பாரீர்வரதா மிகுகுணமுள (பர)

அநுபல்லவி

இருகரமும்யான்குவித்தேயினிதாகவே
கோறினேனுந்தனைப் (பர)

சரணம்

மதுரமாம்பதார்த்தவகை மனதுமகிழ்ந்துன்முன்படைத்து
உனைப்பணிந்தேன்நளினமுகா—
இனியுமுந்தன்சிந்தையதுயேனிரங்கலைதானுனக்கே
மனமதிரங்கிமைந்தன்ரங்கசாமிமீதிலேகடைக்கண் (பர)

ஜெகன்மோகனஸ்வரூபமாது என்றமெட்டு

இராகம் தேசிகதோடி தாளம் ஆதி

பல்லவி

ஸ்ரீரங்கநாதாவுந்தனருளைத்தாரும்
நயந்துகாரும் சீதாசமேதனேமுன்வாரும் தினம்பணிந்துன்
பாதாரவிந்தமலர்கோறும்—அடியன்மீது
நீதானருட்கருணைபாரும் உந்தனைவிட

ஆதாரம்வேறிலைகூறும்—அகமகிழ்ந்து
பாதுகார்ப்பதுன்பாரமேயைய
பக்தரக்ஷகபரிமளமெய்ய
கோதிலாதவுன்சேவைதாவைய
குணமிகுமெய்ய பிரமனுக்கைய (ஸ்ரீ)

ஆதிமூலமென்று அழைத்தபோதுயானையைக்கார்த்த
நீதியாகவந்துயிப்போது—என்மூறைகேட்டு

காதாமனமுமீரங்காது—இச்சாலம்செய்தால்
ஏதுசெய்வேனுன்புவிமீது—இனிமேலையா
பாராமுகமினியாகாது—இனிமையாக
பக்தன்ரங்கசாமிசொன்னேனே
சித்தமகிழ்ந்தேகாரும்கோனே
இத்ததிவந்துன்னருளைத்தாதேனே
ஏதுசெய்வேனே இக்கணம்நானே (ஸ்ரீ)

பஹாரியாலேதேகோ என்றமெட்டு

பல்லவி

ஸ்ரீரங்கநாதா திவ்யபொற்பாதம்தா

அநுபல்லவி

திங்கள்மேவுசெஞ்சடையோன் மைத்துனனேவா
தீரமாகவந்து இந்நேரந்தன்னிலே
திவ்யபொற்பாதம் தா (ஸ்ரீ)

சரணம்

கருடவாகனுசமேதா கிருபையைநீதா—இத்
தருணம்வந்துகார்த்தருளும் தீர அச்சுதா
திவ்யபொற்பாதம்—தா (ஸ்ரீ)
இலக்ஷ்மிசமேதனுன நாரணனே—வா
இலங்கைமன்னவனைச்சிரம்பத்தறுத்தவா
திவ்யபொற்பாதம்—தா (ஸ்ரீ)
பக்தன்ரங்கசாமிசொல்பதத்தைக்கேட்டுமே
நத்தியிக்கணம்வந்துபவத்தையோட்டுமே
திவ்யபொற்பாதம்—தா (ஸ்ரீ)

பநாகைசி புகா கைசி ஜபீவோ என்றமெட்டு

பல்லவி

ராமராமா ராம ராமா ராக்ஷசபீமா நற்சோமா
பூமகள்மணாளராமா புண்ணியராமா

தொ) மாமேவுகோசலையின்மகனுகவந்து தித்தாய்
பூமீதிலேயாக்கர்புரிந்தவருத்தமொளித்தாய்
நானேஉன்னைநம்பினேனே
ரக்ஷியுந்தானே—சீமானே
ஞானநற்காருண்யவானேநாடினேன்தானே

(தொ) நந்தாகோவிந்தாமுகுந்தாநின் பாதாரவிந்தா
வரந்தாவைகுந்தா
இந்தாகுலந்திருமந்திராதிதந்ரா எந்தாயனந்த சுகந்தா
சந்ததம்பணிந்தேன்ரங்கசாமிசேயேனே
கனவானே சுந்தரமிகுந்தகோனே
துணையெனத்தானே நம்பினேன் (ரா)

பெரியாமநகர்

ஸ்ரீகரிவரதப்பெருமாள்கருணைசாஷித்யம்

இராகம் காம்போதி தாளம் ஆதி

பல்லவி

உனை நம்பினேனிது தர்மமாமா

அநுபல்லவி

ஓம் நாரணனேபரிபூரணனே இதுதகியுனை (ந)

சரணங்கள்

இன்னும்வர் மமோசொல் ஏழைபெந்தன் மீதில்
மின்னுங்கோதண்டவில்—வீரனே
அனுதினந்துதிபுரிந்தனே (ந)

பெரியமாநகர்வாழ்கரிவரதமேலோ
தருணமேவந்தாளாய்தாரகமந்ரா ரகுபதி உனே (ந)

வஞ்சமேனோதா பஞ்சவர்க்குத்தூதா
அஞ்சலென்றேன்வாதா ஐயனே அகமகிழ்வொடு அருளுனே (ந)

ஒற்றைநகர்ப்பூமி நத்திவாழும்நேமி
பக்தன் ரங்கசாமி—பாடினன்
பரிவொடு வருகுவாயுனே (ந)

ஆதாரமேதேனு நீதருவாய் என்ற மெட்டு

இராகம் பியாக் தாளம் சாப்பு

கண்ணிகள்

சீதா சமேதா திகழ்ராமனே நின்
பாதாரமே பணிந்தேன்பூமனே
வாதாசெய்குருய் பரந்தாமனே
வரமருளும் ஆயிரம்நாமனே (சீதா)

கண்ணனே வெண்ணைதனையுண்டோனே
கார்த்தருளும் எந்தனின்பெம்மானே
மண்ணதனையன்று தின்றவனே
மாதரவசோதைமகிழ்சேயனே (சீதா)

பாண்டவர்தூதா பரிபூரணா
பத்மாசூரனைவதைத்தநாரணா
ஆண்டருள்வாயிக்கணம்காரணா
ஐயனேவாதுளபதாரணா (சீதா)

சந்ததமும்உந்தனைப்பணியும்மைந்தன்
ரங்கசாமிமீதிலன்புவையும்
சுந்தரகருடன்மீதமையும்
சொரூபத்துடன்வந்தருள்வாய்நீயும் (சீதா)

வருவாயே என்ற வர்ணமெட்டு

இராகம் தேசிகதோடி தாளம் ஆதி

திருமாலே தினகரகுலநல திருமாலே
தேவதேவ பாவநாசகாரண (திரு)

திக்கஜத்தைவென்றரக்கனக்ரமத்தினைத்தகர்த்த (திரு)
ஜெயதசரதனருள்புயபலமிகுங்குண (திரு)

சீதக்கடலிடைமாதுத்தமியொடு
போதப்பணியதன்மீதுற்றிடுநேய (திரு)

திருமணமுடிவுறுபெருமையையாய்வர பாசுர
ரமணனும் வழிவரபொருதியதிட (திரு)

தினம்பத்தியுள்ர்மனம் புத்திதனில்மனம்
பற்றியவர் வினைம்முற்றுமொளி (திரு)

சீதைமாதுமகிழ்சம்ப்ரமலோலா
தேவிகோசலையளின்றிடுபாலா
ஏதுஇந்தவாதுகளனுகூலா

இணையடிபணிந்து நறுமலரணிந்து தினமுனை
நினைந்துவருமகனுவந்து (திரு)

பூதலம்புகழுமாநகர்ப்பூமி
புண்ணியமேவுமொற்றைமாநகர்நேமி
சாதனைத்திறக்கவிரங்கசாமி
தமிழதுபொருந்தவருள்கொடுமுகுந்த
வமரர்கள்புரிந்த தவமதிலமைந்த (திரு)

இராகம் கல்யாணி தாளம்ரூபகம்

கண்ணிகள்

ராமா என்றேசொல்லும் நீதிவாக்யமே
நாம்நம்பினுலுண்டநேகபாக்யமே
ஆமாமிக்காயமீதென்னசிலாக்யமே
அன்பன்ரங்கசாமியின்சொல்யோக்யமே (ரா)

பெண்டுபிள்ளையெனும்தொந்தசம்மதமே
கொண்டுயிருப்போருக்கேயென்னசதமே
சண்டன்வருவதற்கேவெகுயிதமே
சாமியுனைநம்பினோர்க்குண்டுன்பதமே (ரா)

ஆதிமூலமென்றயானையைக்காத்தோன்
தீதிலாமச்சமாய் வேதத்தைச்சேர்த்தோன்
நீதியிலாயிரண்யன்றனைத்தீர்த்தோன்
நிருதனும்மாபலிதானத்தைவார்த்தோன் [ரா]

விந்தைதவைகுண்டம்விளங்கிடுமையன்
எந்தைஎல்லோரையுமீன்றிடுதுய்யன்
அந்தமிகுந்திருவானந்தமெய்யன்
ஆயர்சோதையருளியபையன் (ரா]

கொந்தாரும்பூங்கணையால் என்றமெட்டு

இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஏகம்

பல்லவி

ராமாஎனும்நாமமே நம்பினேனின்பமே

அநுபல்லவி

பூமாதுநாதன்—பொன்போன்றபாதன்—புகழ்று
மறைவேதன்—குழற்கீதன் இகழ்ந்தன்—தமைப்
போற்றுவர்க் குபகாரன்—அதி
யாற்றல்பெற்றிடுவீரன்—சினம்
பொங்கும்மரவம்பங்கிலுறங்குங்குணதங்கந்திரு [ரா]

ராவணனைவதைத்தோன்
நாகமதில்நடித்தோன்

நளினவதனமாரன்—மிகுதீரன்—அவதாரன்—கெம்பீரன்
ஆயனானநந்தகோபாலன்
சேயானவிந்திரஜாலன்—சுய
நற்கருணைபொழிக்கடலெனுமிக்கசுகுணன் சக்கரகர (ரா)

விஸ்வகுலத்துதித்தோன் வேண்டியுனைத்துதித்தோன்
விருப்புடன்ரங்கசாமி-இந்தப்பூமி—புகழ்நேமி—பணிக்ஷேமி நல

விந்தைபெருமுகுந்தவமார்
தொந்தரை தவிர்விந்தசாண
விற்பிடித்த—மெய்க்கரத்து
துஷ்டரை—க்ஷணத்தொளித்த [ரா]

பக்திசாதிக்கவிடாது என்றமெட்டு

இராகம் செஞ்சுருட்டி — தாளம் ஆதி

பல்லவி

இந்தவாதேனோ ரகுராமா இனி
என்னசெய்குவேன்பரந்தாமா [இந்]

அநுபல்லவி

சொந்தமுடனுந்தன்மைந்தனையாளவே
சுந்தரானந்தாகோவிந்தாமுகுந்தனே (இந்)

சரணங்கள்

தாடகையைவதைத்தாயன்று
தவமுனிவன்வேள்விக்கேசென்று
நாடிமிதிலையைத்தேடிச்செல்லும்போது
வாடுங்கல்லகலிகைமாசாபந்தான்தீர்த்தாய் (இந்)

ஆழிசாரங்கமேந்துங்கையா—உந்தன்
அன்பர்க்கருள்புரியுமெய்யா
ஆழியிற்றுயின்றஎன்னப்பனேமாதவா—இவ்
வேளையில் வந்துநான் வேண்டும் வரந்தாராய் (இ)

ரங்கசாமியின்முறைகேளே வுந்தன்
பங்கஜபதமலர்க்தாளே சிந்தனைசெய்தேனே
மைந்தன்யான்தானுமே
சிங்காரமங்காதரங்காநரசிங்கா (இந்த)

வெள்ளைக்கமலமுறைவாணியே என்றமெட்டு

இராகம் கமாஸ் தாளம் ஆதி

பல்லவி

ஜெயஜெயரகுபதிஸ்ரீராமா நின்
திருவடிபணிந்தேன் ஸ்ரீராமா

அநுபல்லவி

தயைமிகுதீரனே
தகுந்தவில்வீரனே
புயபலமேவுசிங்காரனே பூமிதேவி
மகிழும்ஒய்யாரனே

சரணங்கள்

அண்டமளந்தவா
அன்பர்க்குகந்தவா
பண்டுமன்மதன்றனையீன்றவா பரந்தாமா
பஞ்சவர்தூதுசார்ந்தவா (ஜெய)

ராமவதாரனே
ராக்ஷசற்கேமனே
நேமமிகுந்தவேலன்மாமனே நீதிசேரும்
நீலமேகசோமனே (ஜெய)

சங்குசக்ராதரா சத்ருக்கசோதரா
ரங்கசாமிக்கவிக்கேயாதாரா உனை
நாளும்நம்பினனே தாமோதரா (ஜெ)

இராகம் எதுகுலகாம்போதி தாளம் திரிபுடை

பல்லவி

ஆதிமூலா சோலைபாலா அண்டினேனெனை
யாளும் சீலா—கோலாகலா (ஆதி)

அநுபல்லவி

சோதிலீலாவாதென்மேலா
சுந்தரானந்தகோபாலா—கோலாகல (ஆதி)

சரணம் முடுகு

அனைத்துமிது அனித்யமெனநினைந்துனைத்துதி
செய்மனத்தனையனருள் கணத்திலென்முன்தனித்
துவரவின முனக்குமனமிரக்கமிலையரி (ஆதி)

மாயவாழ்வின் காயமீதே
மண்ணதிற்பிறந்தபோதே—தப்பாதே (மாய)

மாயவா இன்னமேன்வாதே
மைந்தனம்பினேன் தப்பாதே—இப்போதே (மா)

மதக்கொடியராக்கர்குலமதைநொருக்கி
யரசிருக்கையதுபுரிந்திருக்கவிபிஷணர்க்கு
முடியதுகொடுத்தமிகுதிடத்தபுயபல (ஆதி)

ஒற்றைமாநகர்வாழ்நேமி
ஓங்குகவிராங்கசாமி—நற்பூமி (ஒற்றை)
பக்தன்போற்றினேனேக்ஷேமி
பவமொழித்திடுமென்சாமி நற்பூமி (ஒற்றை)
பாரதபோரிற்—சாரதியானவெகு—தீரவுதாரமாரகெம்பீரவொளிர்
சிதாவாதுஈதுசெய்யாதுனிரு—பாதாரமேதந்தாதரிநாதஜெய (ஆ)

வாடியழுகாதே நடபாலபாலா என்றமெட்டு

இராகம் இந்துஸ்தான்தோடி தாளம் ஆதி

கண்ணிகள்

மாதவாமுகுந்தவாமா வாராய்வாராய்—ஒளிர்
சீதராஉந்தனருளைத் தாராய் தாராய்
ஆதிமூலமென்றழைத்தபோது போது—யானை
வாதைதன்னைத்தீர்த்துவிட்ட சாது சாது யான்
ஓதுமுறைகேட்டுயிரங்காது வாது—செய்ய
லாகுமோசொல்நாதனேஎன்மீது மீது
அரக்கர்கள் கருவறுத்தாயன்று அன்று
இரக்கமுடன்வந்துநீமுன் நின்று நின்று
சுருக்குடன்கிருபைசெய்வாயின்று இன்று
வருத்தமேசெய்யாதேராமா நன்று நன்று
ஒற்றைமாநகரதிலென்னாளும்வாழும்—பாலன்
பக்தன்ரங்கசாமிசொல்லைக்கேளும் கேளும் உனை
நத்தியேபணிந்தேனெந்நாளும் நாளும் லோக
கர்த்தனேகண்பார்த்திவ்வேளை ஆளும் ஆளும் சுவாமி (மா)

நூற்றெட்டுத் திருப்பதிச் சாற்றுதற் பாசுரம்

இராகம் இந்துஸ்தான்தோடி தாளம் ஆதி

பல்லவி

பரந்தாமா பதமலர்துதிபுரிந்தனன்பூமா (பர)

அநுபல்லவி

பிரபலமுனிவர்தொழுமுரஹரிவிரைவொடுவருகுவாய் [பர

பச்சைமேகமொத்ததிரேகவச்சுதாஸ்ரீலக்ஷ்மியாக [பா]
பார்த்தனுக்கன்னாள்ரதசாரதியாய்வருமோகனனேதிகழ்தரு
நேர்த்தியேநிறைமூர்த்தியேவரமருள்வாய்புகழ்பெரு [பா]

(தொ) சாலோகசாமீபசாரூபசாயுச்யமீயுநற்றகமைபெருராமேச்சுரம்
மேலாந்திருப்பதி பாலமலை ஸ்ரீரங்கம் மேவுநற்காரமடையும்
விளங்குதுவாரகையமர்ந்தவிசாலா
விண்ணவர்பணியும் பண்டரிபுரமேலா
வழங்குகண்ணபுரம்வளரும்சுசீலா
வடிவுடனென்னிடமணுகியடைவொடுயென்மிடியகலப்பரிவுடன் [ப]

(தொ) திருமன்னார்குடி கஞ்சி திருச்சித்ரகூடமும்
திருமாலிருஞ்சோலையும் திருநஹரி ஹரித்துவார்
ஸ்ரீரங்கபட்டினம் சேதுவும் கிஸ்கிந்தையும்
தேசுரும்நூற்றெட்டுத்திருப்பதிப்பூமி
சேர்ந்திலகிடும்ஜெயஸ்ரீபதிநேமி
மாசிலாதவொற்றைநகர்ரங்கசாமி
மைந்தனம்பினன்பொருந்தவிந்தைசேர்ந்திடும் முகுந்தகுணநிதி (பா)

ஒற்றைமாநகரம்

அங்காளம்மன் அருட்சாஹித்யம்

அமாரநபீ என்றமெட்டில் பின்மகுடம்

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி

பல்லவி

ஆண்டருள்வாய் கண்ணே அங்காள அம்மையே

அநுபல்லவி

வேண்டினன்கோரியே தாண்டவன்பாகியே
விகஜிதரத்தினமகுடசிரத்தினி
பகருமுறைக்கதிதயவுடனித்தி (ஆண்)

(தொ) மகிடசம்மாரிமஹேஸ்வரிமெஞ்ஞானமகம்மாயி
ஈஸ்வரிமகாதேவியே
முகில்தவழுங்கோபுரத்தொற்றைநகர்மேவுநல்மூலகாரணியுநீயே
மூாஹரியின்றங்கைமுத்தேமீனம்மணிவா
திறமிகுகாம்பரி
தீனதயாபரி
தித்தித்தரிகிடசப்தத்தாளமமைத்துச்
சுடலேயில் நிர்த்தக்கவுரிவங் (தாண்)

(தொ) தேனேசெழுங்கொழுந்தேதிகழ்மாணிக்கமேசங்கரி
ஸ்ரீ அம்பிகா திவ்யதேஜோன்மயாகிர்பாகரி
திருவடியேபணிந்தேன்ரங்கசாமியே
சித்தக்கனிவொடு
முத்திப்பொருளது
மெத்தத்தருகுவாய்
சத்திச்சாம்பவி (ஆண்)

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி

பல்லவி

அலர்ந்தசெந்தாமரையுடன் முல்லையணிந்தே
வன்பர்கொண்டாடும்— அங்காளம்மைஎன்னம்மணி
ஒற்றைநகர்வாழ்— அங்காளம்மைஎன்னம்மணி
அன்புடனுன்பதநம்பிடுமைந்தனே ஆதரித்தாளுமெந்தாய்
அங்காளம்மைஎன்னம்மணிஒற்றைநகர்வாழ்
அங்காளம்மைஎன்னம்மணி (அலர்)

அங்கையினிங்கிதகங்கணமும்புனை சங்கரிசிங்கமமர்ந்திடுசுந்தரி
அண்டர்கொண்டாடுந்தெய்வம் அங்காளம்மைஎன்னம்மணி (அ

ஆதியிற்சுடலேமீதுநிர்த்தமிடுசோதிசுத்தமிகுசீதிபெற்றிலகு
அண்டர்கொண்டாடுந்தெய்வம் அங்காளம்மைஎன்னம்மணி
ஒற்றைநகர்வாழ்— அங்காளம்மைஎன்னம்மணி (அல)

அமுதச்சிறுமொழியதனைச்செவிபுக
விதமொத்துறைசெயுமுருகக்கடவுளி
னப்பனுமானதனிப்பொருளாகிய
முக்கண்ணனேபெருமற்புதநாயகி
அண்டர்கொண்டாடுந்தெய்வம் அங்காளம்மைஎன்னம்மணி (அ

அருளானந்தத்துடன் கூத்தர்டி
அடியேன்பணிந்தேனுந் தனைநாடி
திருள்சரராங்கசாமிசொல்பாடி
சேவித்துக்கொண்டேகொண்டாடி
திருச்சந்நிதானத்தைத்தேடி பணிந்தேனடி
திருச்சந்நிதானத்தைத்தேடி (அலர்)

மங்களம்.

இங்கிலீஷ்பியாண்ட்
வஞ்சகமானமான் என்றவர்ணமெட்டு

இராகம் கலயாணி — தாளம் ரூபகம்

பல்லவி

ஆனந்தமானகல்யாணகுணதிப ஆதிசிவன்மங்களம்

அநுபல்லவி

மோனந்திகழ்கணநாதன் சரஸ்வதி மூலப்பொருளைலத்
திருமாலுக்குமை வேலர்க்குமெய் [ஆ]

சரணக்கண்ணிகள்

வானம்புவிபணிதேவர்கட்கும்
மானிலத்துள்ளவர்யாவர்கட்கும்
ஞானமுடனின்னூல்தன்னையச்சிடச்செய்
நறப்ரபுவாம் உத்தம சற்பத்தி பெருமற்புத வான்
நன்மை—துரைசாமிப்பூபதியும்—எந்த
நாளும்ஜெயமங்களமே [ஆ]
சத்தியமாண்பும் தயை முக்குணப்நிறை
சத்திவடிவேல்பிரஸின்
சற்குணமானேஜர் எழில்
சாந்த—லக்ஷுமணபூபனுமென்றென்றும்
வாழ்ந்திடஜெய மங்களமே [ஆ]
ஒற்றைநகர்ச்செந்தமிட்கவிரங்கதாஸ்
ஓதிடும்—பாமலை கியாதிபெறறேஎங்கும்
ஓங்கிடவேமங்களமே (ஆ)

இங்கித மங்கள மேங்கினுந் தங்குக

ஸம்பூர்ணம.

இதன் இரண்டாம் பாகம் கூடிய சீக்கிரம் வெளிவரும்.

——):(——

இந்நூலாசிரியரால் இயற்றிய

டிராமா சரித்திரங்கள்

OFFICE OF THE ...ISTRAR ... MADRAS
- JAN 1927

பார்ஸி வள்ளிதிருமணம்

,, சாவித்திரி சத்தியவான்

,, அல்லி அர்ஜுனா

பேரூர் வழிநடைப்பதங்கள்

வள்ளியம்மை சுயம்வர வண்ணச்சந்தம்

புதிய வர்ணமெட்டுகள் நிறைந்த

சிவ ராம பஜனாமிர்தம் என்னும்

பக்திரசக்கீர்த்தனைகள்

இரண்டாம்பாகம்

இன்னும் கூடியசீக்கிரம் வெளிவரும்.

ஆர்டருக்கு முந்துங்கள்,

சத்திவடிவேல் பிரஸ், கோயமுத்தூர்.